| | | |
|---|---|---|
| **பாடம்** | : | நன்னெறிக் கல்வி |
| **வகுப்பு** | : | 5 |
| **பண்புக் கூறு** | : | விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை |
| **க.தரம்** | : | 14.1 வாழிடச் சமூகத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை விவரிப்பர். |
| **அடைவுநிலை** | : | 1 |
| **கட்டளை** | : | சூழலுக்கேற்றவாறு நீங்கள் எவ்வாறு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிப்பீர்கள் என தெரிவு செய்க. |

1. உங்களுடைய பூப்பந்து மட்டையைத் தோழிக்கு இரவல் தருகிறீர்கள். அவர் விளையாடும்போது பூப்பந்து மட்டை உடைந்து விட்டது. நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

_______________________________________________

_______________________________________________

2. வாழிட மளிகைக் கடையின் நீண்ட வரிசையில் முதியவர் ஒருவர் வெகு நேரம் காத்துக் கொண்டிருக்கிறார். வாழிடச் சமூகத்தில் ஒருவரான நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

_______________________________________________

_______________________________________________

3. விளையாட்டுப் பூங்கா நடைப்பாதையில் நீங்கள் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள். வாழிடச் சமூகத்தினரைச் சேர்ந்த ஒரு சிலர் அவ்வழியே மெதுவோட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு விட்டுக்கொடுப்பீர்கள்?

_______________________________________________

_______________________________________________

4. நீங்கள் பனிக்கூழ் உண்ண விரும்புகிறீர்கள். பனிக்கூழ் வாங்குமிடத்தில் வாழிடச் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். சிறுவர்கள் முன்னிலையில் பனிக்கூழ் சாப்பிட முடியாத நிலை ஏற்படுகிறது. நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

_______________________________________________

_______________________________________________

5. நீங்கள் ஏற்பாடு செய்திருக்கும் திறந்த இல்ல உபசரிப்புக்கு மூவினத்தைச் சேர்ந்த வாழிடச் சமூகத்தினரும் கலந்து கொள்ள இருக்கின்றனர். உபசரிப்புக்குண்டான உணவு தேர்வின்போது நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

_______________________________________________

_______________________________________________

LIVEWORKSHEETS